# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - 17.04.2025</u>

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். SA 19770/SCIC/2023</u>

திருமதி பாரதா க/பெ.கருணாகரன்
பிளாட் எண்.45, ராஜலட்சுமி நகர்
லயன் சிட்டி, திருநகர்
மதுரை - 625 006. — மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம்
மதுரை காவல் ஆணையரகம்
மதுரை. ------ பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 16/08/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ காவல் ஆணையர் அலுவலகம், மதுரை மாநகரம்-க்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பார்வை- சென்னை உயர்நீதிமன்ற உத்திரவுப்படி தமிழக புதிய அரசாணை எண்.99, நாள் 21/09/2015 (G.O.Ms.No.99, Personnel and Administrative Reforms (A) Department, dated 21-09-2015-ன் படி மூன்று தினங்களில் ஒப்புகை ரசீதும் முப்பது தினங்களில் நடவடிக்கை எடுத்து தகவலை தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது - தங்களது எல்லைக்குள் உள்ள W1-திருநகர் காவல் நிலைய குற்ற எண்.387/2023 சம்பந்தப்பட்ட கீழ்க்கண்ட சில தகவல்கள் தேவைப்படுகின்றன - தொடர்பாக -மேற்சொன்ன குற்ற வழக்கு சம்பந்தமாக புகார் பெறப்பட்ட தேதி மற்றும் வழக்கு பதிவு செய்யப்பட்ட தேதி தகவல் தரவும். வழக்கு பதிவு

செய்ய காலதாமதத்திற்கான காரணம் தகவல் தரவும்" என்பன போன்று 4 இனங்களில் மொத்தம் 15 உட்பிரிவுகளில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத்தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், தலைமையிடம், மதுரை மாநகர் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.எஸ்4/967/40243/2023 நாள் 06/11/2023 வாயிலாக இன வாரியான பதில் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 29/09/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 14/11/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 19770/SCIC/2023 ஆக பதிவு செய்தது. அதன் பின்னர், பொதுத்தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், தலைமையிடம், மதுரை மாநகர் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.எஸ் 1(4)/138/51511/2024 நாள் 28/10/2024 வாயிலாக இன வாரியான தகவல்களை அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர், 18/01/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளி காட்சி வாயிலான விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரில் ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4. இன்று ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரருடன், அவரது சகோதரர் திரு. பசும்பொன் அவர்களும் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டனர். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.R.ஜெயராம், மாநகர குற்ற ஆவணக் காப்பகம், மதுரை காவல் ஆணையரகம், மதுரை அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 06/11/2023 மற்றும் 28/10/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 18/01/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார். அதற்கு பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி மீண்டும் 05/04/2025 தேதியிட்டு இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், இனங்கள் 4(ஏ) மற்றும் 4(ஓ)ஆகியவற்றிற்கு சரியான பதில் வழங்கவில்லை என்றார். இருதரப்பினரின் வாதுரைகளும் கேட்கப்பட்டன. பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு 05/04/2025 தேதியிட்டு அனுப்பப்பட்ட தகவலை ஆணையம் பரிசீலனை செய்கையில், இனம் 4 (ஏ)-க்கான தகவல் ஆவணங்களின்படியான உரிய தகவலை அனுப்பியிருப்பதாகப் பதிவு செய்து ஏற்கிறது. இனம் 4(ஓ)-க்கு பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப் பெற்ற 10 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேலும், மனுதாரர், தனக்கு வழங்கப்படுகிற தகவல்களின் நகல்களை சான்றொப்பமிட்டு வழங்க வேண்டுமென்று கோரினார். மனுதாரருக்கு**

**வழங்கப்படுகின்ற தகவல்களின் நகல்களை பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரர் கோரியவாறு சான்றொப்பமிட்டு வழங்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டின் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஓம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 19770/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம்
மதுரை காவல் ஆணையரகம்
மதுரை.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி பாரதா க/பெ.கருணாகரன்
பிளாட் எண்.45, ராஜலட்சுமி நகர்
லயன் சிட்டி, திருநகர்
மதுரை - 625 006.

RG/PC